DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 59/2018

Deposition of witness for: PW - 1

Name : Dhanasekaran Father/Husband Name: Ponnaiah

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 28.05.2024

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024.

**எதிரி ஆஜர்.**

**( சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் தற்போது நரசிங்கத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வீடுகளுக்கு கல் சப்ளை செய்து வந்தேன் தற்போது உடல் நிலை சரியில்லாததால் வீட்டில் ஒய்வில் இருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 2005ம் ஆண்டு மாதம், தேதி ஞாபகம் இல்லை. அன்று ஆயுத பூஜை. ஒத்தக்கடை பக்கம் காரில் வந்து என் உறவினரை இறக்கிவிட்டுவிட்டு வீட்டிற்கு காரில் போய்கொண்டு இருந்தேன். குவாரி பிரிவு ரோடு பக்கம் வந்தபோது சேகர், போஸ் ஆகியோர்கள் அங்கு தண்ணி அடித்து என் காரின் முன்பு தடுமாறி வந்து மறித்தார்கள். நான் ஏன்பா ஒதுங்கிக்கோங்க என்று சொன்னேன். அப்போது சேகர், போஸ் அவமரியாதையாக பேசி, கண்ணாடி காரில் கைவத்து தட்டினார்கள். நான் காரை எடுத்து வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்பு ஐந்து, ஆறு நபர்களுடன் சேகர், போஸ், தக்காளி என்ற வெங்கிடு, ஆஜர் எதிரி சுசி, சுதாகரன் ஆகியோர்கள் என் வீட்டிற்கு வந்து மீண்டும் தகராறு செய்தார்கள். வெளியில் நின்று கொண்டிருந்த கார் கண்ணாடியை ஆஜர் எதிரி, போஸ் மற்றும் சேகர் ஆகியோர்கள் கல்லை வைத்து கார் பின் கண்ணாடியை உடைத்தார்கள். சகாதேவன் என்பவரின் மகன் காலால் கேட்டின் கதவை மிதித்து என்னை வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டார்கள். வெளியில் இருந்த டியுப்லைட், பூச்செடி ஆகியவைகளை மேற்படி ஆறு பேர்களும் அடித்து உடைத்தார்கள். சேகரும், போஸ்சும்

போலீசிடம் சொன்னால் கொன்றுவிடுவோம் என்று சொன்னார்கள். நான் 100-க்கு போன் செய்தேன். போலீசார் வந்து பாதுகாப்பு கொடுத்தார்கள். பின்பு புகார் கொடுத்தேன். **அந்த புகார் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**( எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை. குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. )**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 53/2018

Deposition of witness for: PW -

| | | | |
|---|---|---|---|
| Name | : | Father/Husband Name: | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019.

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**